உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 3.] || பிங்கள௵ சித்திரை௴-1917௵ ஏப்ரல்௴ || [இதழ் 4

பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்
இருங்கடன் மூடி யிறக்கு மிறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபர முங்கொண்டு கங்காளராய்
வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே.

---

## சிவஞானபோதம்—இரண்டாஞ்சூத்திரம்.

(36—வது பக்கத்தொடர்ச்சி.)

### மூன்றும் அதிகரணம்.

### போக்கு வரவு புரிய.

(இ-ள்.) ஆன்மாக்கள் மாறிப்பிறந்துவரும் (எ-று.)

மாறிப்பிறத்தல்—இறந்துபிறத்தல்.

இதில், க-வது—தன்றாற் கூறப்படும் பொருள்:—உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும்.

உ-வது—ஐயப்பாடு—புனருற்பவம் சடத்துக்கேயல்லாமல் சித்துக்கும் உண்டோ?

ந-வது—பிறர் கூறும் பக்கம்—வேதத்தில், குடமுடைந்தபோது அக்குடத்தில் அடங்கியிருந்த ஆகாயம் (குடாகாயம்) வெளியிலிருக்கும் ஆகாயத்தோடு கூடுமாறுபோல், உடம்பு நீங்கிய காலையில் உயிரானது பிரமப்பொருளோடு கூடுமென்று கூறியிருத்தலால், இறந்த உயிர் மீளப் பிறப்பதில்லை. (இது கிரீடாப் பிரமவாதிகள் பக்ஷம்.)

கிரீடாப் பிரமவாதமாவது ஏகான்மவாதத்தின் பிரிவுகளுள் ஒன்று. இச்சமயத்தினர் "பிரமப்பொருளே நான். நான் ஒருபடித்தாயன்றிப் பல வேறுவகைப்பட்ட விகாரப்பொருள்களோடுகூடிப் பலவகையாய் விளையாடுகின்றேன் என்று அறிவதே முத்தி" என்பார்கள்.

இவ்வதிகரணத்தால் குடாகாய உவமையே கூறி, புனருற்பவம் உயிரின்பொருட்டுச் சிவத்துக்கேயாம் என்று கூறும் சிவாத்துவித சைவர்களும், மூலப்பகுதியில் தோன்றும் புத்திதத்துவத்திற்கே அது என்று கூறும் சாங்கியர்களும் மறுக்கப்படுகின்றனர்.

௪-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபு:—உற்பத்தியும் நாசமும் தொடர்ச்சியாயுள்ள பொருளுக்கன்றி ஏனைப்பொருட்கு உற்பத்தி கூடாமையின், ஆன்மாக்கள் மாறிப்பிறந்துவரும்.

௫-வது—இயைபு—உதாரணவெண்பா.

கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து
விண்படர்ந்தத் தூடு வினையினாற்—கண்செவிகெட்
டுள்ளதே தோற்ற வுளமணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழுங்கருவிற் றான். (அ)

அன்வயம்—கண் செவி கெட்டு உள்ளதே தோற்ற, உளம் அத்தூடு விண்படர்ந்து, கண்ட நனவைக் கனவு உணர்வின் மறந்து, மனம் தள்ள, வினையினால் அணுவாய்ச்சென்று கருவில் விழும்.

(இ—ள்.) கண் செவி கெட்டு—கண் செவி முதலிய உறுப்புகளையுடைய இவ்வுடம்பு கெட்டவழி—உள்ளதே தோற்ற—(தனக்கு அழிவின்றிச் சிருட்டிகாலந்தொடங்கி சங்காரகாலம்வரையில்) நிலைத்திருப்பதாகிய சூக்குமதேகமானது பூதசாரஉடம்பு முதலியனவாய்க் காரியப்பட—உளம்—உயிரானது—அத்தூடு விண்படர்ந்து—அப்பூதசாரமுதலிய உடம்பினிடமாகப் பொருந்தி, சொர்க்க நரகங்களிற்சென்று (அனுபவித்துப் பின்னர்)—கண்டநனவைக் கனவுஉணர்வின் மறந்து—நனவிற் கண்டவைகளை கனுக்காணும்போது மறந்து அறிவு வேறுபட்டாற்போல (முன்னை உடம்புகெட்டமையும், பூதசாரஉடம்பு முதலியவற்றோடுகூடி சொர்க்க நரகங்களை யனுபவித்தமையும், பிறவற்றையும்) மறந்து அறிவு வேறுபட்டு—மனம் தள்ள—(முன்னுடம்பு நீங்கும்போது அடுத்தவினையினாற் காட்டப்படும் தெய்வப்பிறப்பு, மக்கட்பிறப்பு, விலங்கின்பிறப்பு, நரகர்ப்பிறப்பு என்னும் நால்வகைப் பிறப்பைப்பற்றி ஆன்மாவிரும்புமாறு) மனம்செலுத்துதலால்—வினையினால்— (அந்தப்பிறவி

யை எடுத்தற்கேதுவாகிய) புண்ணிய பாவ விசேஷத்தால்—அணுவாய்ச்சென்று=சூக்குமதேக மாத்திரையாய்ச்சென்று—கருவில் விழும்= (அம்மனம் தள்ளிய பிறவிக்கு வாய்ந்த) கருவின்கண் விழும் (எ-று.)

உடம்பு நீங்கும்போது முதலில் கெடுவன கண்ணும் செவியுமாகையால் அச்சிறப்புநோக்கி "கண் செவி கெட்டு" என்றனர். பஞ்சபூதங்களின் காரியம் எனப்படும் தூல உடம்பானது எங்ஙனம் சூக்கும உடம்பின் காரியமாகும் என்னும் ஐயம் நீக்குதற்கு "உள்ளதே தோற்ற" என்றனர். அணு என்றது சூக்கும உடம்பை.

"உள்ளதே தோற்ற" என்றதனால் ஆன்மாவானது தூலசரீரம் கெட்டுப்போக சூக்குமதேகத்தோடு பூதசாரமாகிய தேவசரீரமுதலியவற்றை எடுத்தலாகிய உடல்மாறுதல் கூறப்பட்டது. "விண்படர்ந்து" என்றதனால் சொர்க்கலோக முதலியவற்றிற் செல்லுதலாகிய இடம் மாறுதல் கூறப்பட்டது. "கண்ட நனவைக் கனவுணர்விற் முன்மறந்து" என்றதனால் முன்னுடம்பு கெட்டமை, சுவர்க்கமுதலிய உலகங்களையடைந்தமை, அவ்விடங்களில் அனுபவித்தமை என்பவைகளை மறத்தலாகிய அறிவு மாறுபடுதல் கூறப்பட்டது. இவற்றால் ஆன்மாக்களுக்கு மறுபிறப்பு உண்டு என்பது உண்மையாயின் முற்பிறவிகளில் அனுபவித்தவைகளை அவைகள் இப்பிறவியில் ஏன் அறியவில்லை" என்னும் ஐயமும் நீக்கப்பட்டது.

சூக்கும உடம்பாவது சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் காரண தன்மாத்திரை ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணம் மூன்றும் ஆகிய எட்டினாலும் ஆக்கப்பட்ட அருஉடம்பு.

இவ் வெண்பாவினால் வேதத்திற் கூறிய பஞ்சாக்கினி வித்தையும் பெறப்பட்டது. பஞ்சாக்கினிவித்தையின் இயல்பாவது:— நல்வினைச் செய்த உயிர்கள் அந்நல்வினைப்பயனை யனுபவித்தற்பொருட்டு, அவ்வுடம்பினைவிட்டு நீங்கிச் சூக்குமதேகம்பெற்று, சொர்க்கலோகஞ்சென்று அவ்விடத்தில் இன்பம் அனுபவித்தற்குரிய பூதசார உடம்பெடுத்து அவ்விடத்திலுள்ள தேவர்களோடு வாழ்ந்து, போகங்களை யனுபவித்துத் தொலைத்து, எஞ்சிய வினையினால் அத்தேவ சரீரத்தைவிட்டு நீங்கி, சூக்குமதேகத்தோடு மேகமண்டலத்தினை யடைந்து, மழைத்துளிகளோடுகூடி நிலத்தினையடைந்து, நெல் முதலிய பயிர்களோடு கலந்து உணவு ரூபமாய் புருஷசரீரத்தையடைந்து அதில் சுக்கிலமாய்ப் பரிணமிக்கிறது. பிறகு அச்சுக்கிலரூபத்தோடு தாய்வயிற்றையடைந்து கருவாய்ப் பரிணமித்துத் தூலதேகத்தோடு நிலத்தில் தோன்றுகிறது. இவ்

வாறு ஆன்மாவானது தூலவுடம்பைவிட்டு நீங்கிய பிறகு, சொர்க்கமும், மேகமண்டலமும், நிலமும், தந்தையும், தாயும் என்னும் ஐந்திடத்தும் தங்கிப் பிறத்தலினால் இவ்வைந்திடமும் அக்கினியாகவும், இவைகளை யடைந்த ஆன்மா அவ்வக்கினியிலிட்ட ஆகுதியாகவும் தியானித்தல் வேதத்திற் கூறப்பட்டதொரு சாதகமாதலின் இது பஞ்சாக்கினிவித்தை யென்னப்பட்டது.

உதாரணவேண்பா.

அரவுதன் றோலுரிவு மக்கனவும் வேறு
பரகாயம் போய்வருமப் பண்பும்—பரவிற்
குடாகாய வாகாயக் கூத்தாட்டா மென்ப
தடாதுள்ளம் போமா றது. (க)

இது, வேதத்திற் கூறப்பட்டுள்ள குடாகாய உவமையை ஆன்மா தூலஉடம்பைவிட்டு நீங்குவதற்குக் கூறி மயங்குவார்க்கு, குடாகாய உவமையின் உண்மைப்பொருள் இத்தன்மைத்தென விளக்குகின்றது.

(இ-ள்.) இத்தூல உடம்பு கெட்டவழி ஆன்மாவானது சூக்குமதேகம் பூதசாரஉடம்பு முதலியன பெறுதற்கு வேதத்தின்கண்ணே—அரவு தன் தோல்உரிவு=பாம்பு தோலுரித்துப் புதிதொரு தோலைப்போர்த்துச் செல்லுதலும்—அக்கனவும்=புருஷன் நன வுடம்பினின்றும் நீங்கிக் கனு உடம்பிற்செல்லுதலும்—பரகாயம் போய்வரும் அப்பண்பும்= யோகிகள் தங்கள் உடம்பைவிட்டு மற்றோர் சரீரத்திற்போய் மீளுதலும்—பரவில்வேறு=ஆகிய இவ்வுவமைகள் மிகவும் வழங்கவும் இவற்றிற்கு மாறாக—குடாகாய ஆகாயக் கூத்தாட்டு ஆம் என்பது அடாது=குடாக்காயமானது குடமுடைந்தால் ஆகாயத்தோடு கூடுவதுபோன்றதோர் கூத்தாட்டாகும் என்பது பொருந்தாது. (ஆனால் வேதத்தில் குடாகாய உவமை ஏன் கூறப்பட்டதெனில்) உளம் போம் ஆறு அது=ஆன்மா (மகாசங்காரகாலத்தில்) சூக்கும உடம்பு விட்டுப்போதற்கே அவ்வுவமை வேதத்திற் கூறப்பட்டது.

ஃ குடவாகாயம் என்பது குடாகாயம் எனமருவியது. பரவுதல்=எல்லொரும் அறிய மிகவும் நிகழ்தல்.

ஆன்மா உடலைவிட்டுப் போதற்கு இவ்விருவகை யுவமைகளையும் வேதாகமங்கள் கூறுதலால், அவை தம்முள் முரணுதவாறு பொருள் கூறுதலே பொருத்தமுடைத்தாம். ஆதலால், பாம்பு தோலுரித்தல் முதலிய உவமானங்கள் ஆன்மா தூல உடல் விட்டுப்போதற்கும், குடாகாய

உவமானம் சூக்கும உடம்பு விட்டுப்போதற்கும் பொருத்தமுடையன வாம். இவ்வேறுபாடுணராது தூலஉடம்பை விட்டுப்போதற்கு குடாகாய உவமை கூறுதல் குற்றமாம்.

(இன்னும் வரும்.)

---

## சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்தின் 18-வது வருடாந்த மகாஜனக்கூட்டத்து விருத்தாந்தம்.

1. சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் 18-வது (1916ஞு) வருடாந்த மகாஜனக் கூட்டம், இதின் சபாமண்டபத்தில், நிகழும் 1917ஞு மார்ச்மீ 4உ கூடிற்று. அச்சமயத்தில் ஸ்ரீமான் திவான் பஹதூர் பி. இராஜரத்தினமுதலியாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

2. திருக்கூட்டத்தின் 1916ஞு சபாக்கிரந்தமும் வரவு செலவு கணக்கும் வாசித்து அங்கீகரிக்கப்பட்டன.

3. இதனடியிற்குறித்த கனவான்கள் இவ்வருடம் இச்சபைக்கு அத்தியக்ஷர்களாயிருக்குமாறு தீர்மானஞ் செய்யப்பட்டது.

### சபைத்தலைவர்.

ஸ்ரீமான், ச. இராஜாகண்ணுமுதலியாரவர்கள் பி. ஏ.,
சூபரிண்டெண்டெண்டு, அக்கவுண்டாண்டு ஜனரல் ஆபீஸ்.

### உதவிசபைத்தலைவர்.

,, தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள் பி. ஏ.
சூபரிண்டெண்டெண்டு, வர்னாகுலர் ஸ்டடீஸ்,
மதராஸ் கிறிஸ்டியன் காலேஜ்.

### காரியதரிசி.

,, இ. ஆதிமூலமுதலியாரவர்கள், கவர்ன்மெண்டு பென்ஷனர்.

### உதவிகாரியதரிசி.

,, பி. வி. சமாபுரிமுதலியாரவர்கள்
கிளார்க்கு, ரெயில்வே ஆடிட் ஆபீஸ்.

### பாடசாலை காரியதரிசி (கரேஸ்பாண்டேண்டு.)

,, மணி. திருஞானசம்பந்த முதலியாரவர்கள்
கிளார்க்கு, ரெயில்வே ஆடிட் ஆபீஸ்.

## அத்தியட்சர்கள்.

ஸ்ரீமான். திரு. சபாபதி முதலியாரவர்கள்
ரிடைர்ட் ஸப் இஞ்ஜினீர்.

,, யஸ். விநாயக முதலியாரவர்கள் பி. ஏ.
சூபரிண்டெண்டெண்டு, அக்கவுடண்டாண்டு ஜெனரல் ஆபீஸ்.

,, மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள்
முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் தமிழ்த்
தலைமைப் பண்டிதர்.

,, பா. கண்ணப்ப முதலியாரவர்கள்
கிளார்க்கு, ரிவினியு போர்டு ஆபீஸ்.

,, ஆர். துரைசாமி முதலியாரவர்கள்
கிளார்க்கு, மதராஸ் ரெயில்வே கொ ஆபரேடிவ் ஸ்டோர்ஸ்.

,, ஆர். பி. துரைசாமி முதலியாரவர்கள்
கவர்ன்மெண்டு பென்ஷனர்.

,, வா. தி. கோவிந்தராஜ முதலியாரவர்கள்
கிளார்க்கு, ரிஜிஸ்ட்ரார் ஆப் கோஆபரேடிவ்க்ரெடிட்
ஸொஸைட்டீஸ் ஆபீஸ்.

4. ஸ்ரீமான் திவான் பஹதூர் பி. இராஜரத்தின முதலியாரவர்கள் பிரேரேபிக்கவும், ஸ்ரீமான் யஸ். இராஜகண்ணு முதலியாரவர்கள் பி. ஏ. ஆமோதிக்கவும், ஸ்ரீமான் யம். மாசிலாமணிப் பிள்ளையவர்கள் பி. ஏ., பி. எல். (அப்பிஷியல் ரெப்ரீ, ஹைகோர்ட்டு) இத்திருக் கூட்டத்தின் போஷகருள் ஒருவராயிருக்கக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது.

5. அச்சுக்கூடம் வைத்துக்கொள்ளலாம் என்று யாவரும் ஏகோபித்துச் சம்மதித்தார்கள்.

6. பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன.

7. திருவாவடுதுறையாதீனச் சைவப் பிரசாரகர் ஸ்ரீமான் தூத்துக்குடி பொ. முத்தையா பிள்ளையவர்கள் பஞ்சாக்ஷரம் என்னும் விஷயமாகச் சிறந்ததொரு மகோபந்நியாசம் செய்தார்கள்.

காரியதரிசியவர்கள் அக்கிராசனர், சைவப் பிரசாரகர் முதலியவர்களுக்கு வந்தனமளித்த பிறகு சபை கலைந்தது,

இ. ஆதிமூலமுதலியார்.
காரியதரிசி.

---

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் பதினெட்டாவது வருட (1916ஸ்ரு) சபாக்கிரந்தம்.

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
றுதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநல னுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே.

---

### முன்வருடத்து மகாஜனக் கூட்டம்.

இத்திருக்கூட்டத்தின் முன் வருடத்து மகாஜனக்கூட்டம் 1916ஸ்ரு பிப்ரவரிமீ 20உ நடைபெற்றது. அப்போது ஸ்ரீமான் சதுரை இராஜா கண்ணு முதலியாரவர்கள் பி. ஏ. அக்கிராசனம் வகித்தார்கள். அதின் விருத்தாந்தம் 1916ஸ்ரு மார்ச்மீ வெளிவந்த சைவம் இரண்டாமலர் மூன்றுமிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

### திருக்கூட்டத் தொகை.

| | |
|---|---|
| இத்திருக்கூட்டத்தில் 1916ஸ்ரு ஜனவரிமீ முதல்தேதியிலிருந்தவர்கள். | 60 |
| அவ்வருடத்திற் சேர்ந்தவர்கள். | 0 |
| ஷை நீங்கினவர்கள். | 9 |
| 1916ஸ்ரு டிசம்பர்மீ 31-தேதியிலிருந்தவர்கள். | 51 |

இவர்கள் பெயர்முதலியன இதின் முதல் அநுபந்தத்திற் காட்டப்பட்டுள்ளன. இவர்களுள் மேற்குறித்த காலத்தில திருவல்லிக்கேணி மளிகை வர்த்தகர் ஸ்ரீமான் ரா. குமாரசாமிச் செட்டியாரவர்களும் மதராஸ் பாங்க் பென்ஷனர் ஸ்ரீமான் தி. முருகேச முதலியாரவர்களும் சிவபெருமான் திருவடி நீழலை யடைந்தார்கள்.

### சைவ பாடசாலை.

இப்பாடசாலையில் பாலர் வகுப்புமுதல் நான்காம் வகுப்பு வரையில் 5 வகுப்புகளிருக்கின்றன. மூன்று உபாத்தியாயர்களால் தமிழும் ஆங்

கிலமும் சைவநூல்களும் ஒழுங்காகக் கற்பிக்கப்படுகின்றன. இப்பாடசாலையின் பொருட்டுச் சென்ற 1916ஞு செலவான தொகை ரூபா 478—14—0.

| | |
|---|---|
| இப்பாடசாலையில் 1916ஞு ஜனவரிமீ 1உ இருந்தசிறுவர்கள். | 65 |
| 1916ஞு சேர்ந்தவர்கள். | 48 |
| ,, விட்டவர்கள். | 39 |
| 1916ஞு டிசம்பர்மீ 31உ இருந்தவர்கள். | 74 |

இப்பாடசாலையை இராஜாங்கப் பாடசாலைப் பரிசோதகராகிய ஸ்ரீமான் ஜெ. சுவாமிநாத ஐயர் பி. ஏ., எல். டி. அவர்கள், 1916ஞு ஜூலைமீ 29உ பரீட்சைசெய்து, பாடசாலை பலவழிகளிலும் அபிவிருத்தியடைந்து வருவதாகத் தமது அபிப்பிராயத்தை எழுதி யுள்ளார்கள்.

இத்திருக் கூட்டத்தின் போஷகரும் மெஸ்ஸர்ஸ் பெஸ்டு அண்டு கம்பெனி துவிபாஷிகருமாகிய ஸ்ரீமான், யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள் 1916ஞு ஜூலைமீ 19உ இப் பாடசாலையை நேரில்வந்து பார்த்து மகிழ்ந்து சிறுவர்களுக்கு இனிய தின் பண்டங்கள் வழங்கினது மன்றி சென்னைச் சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் தாம் நடத்துவித்த மகா கும்பாபிஷேகத்திற்கும், புரசையில் நடத்துவித்த தெப்போற்சவத்திற்கும் சிறுவர்களை யழைத்துச் சென்று, தமிழ்வேத பாராயணஞ் செய்வித்து உபசரித்தார்கள். இப்பாடசாலைக்குச் சொந்தமாக விசாலமான கட்டிடம் ஒன்று கட்டிக் கொடுப்பதாக வாக்களித் துள்ளார்கள். இவர்களின் வள்ளற்றன்மையும் பரோபகார சிந்தையும் மிகவும் பாராட்டற் பாலன.

இப்பாடசாலைச் சிறுவர்களைத் திருவல்லிக்கேணிச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் தங்கள் சபையின் வருடோற்சவத்திற்கும், வாலாஜாபாத் பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீமான் வா. தி. மாசிலாமணி முதலியாரவர்கள் காஞ்சி மாநகரை யடுத்த பாலூரில் நடைபெற்ற திருவூறல் மகோற்சவத்திற்கும் அழைத்துச் சென்று தமிழ்வேத பாராயணஞ் செய்வித்தார்கள்.

"சைவம்."

| | |
|---|---|
| 1916ஞு ஜனவரிமீ 1உ இப்பத்திரிகைக்குச் சேர்ந்திருந்த சந்தாதாரர்கள். | 520 |
| 1916ஞு டிசம்பர்மீ 31உ இருந்தவர்கள். (ஆயுள் சந்தாதாரர்கள் 118 பேர் நீங்கலாக) | 780 |

| | | | | |
|---|---|---|---|---|
| இப்பத்திரிகைக்கு | 1915ஆு | சந்தா வரவு ரூபா. | | 378 |
| ஷை | 1916ஆு | ஷை | | 590 |
| இப்பத்திரிகைக்கு | 1915ஆு | செலவான தொகை | | 344 |
| ஷை | 1916ஆு | ஷை | | 521 |

இவற்றால் இப்பத்திரிகை முதல் வருடத்தைக் காட்டிலும் இரண்டாம் வருடத்தில் மிகவும் அபிவிருத்தி யெய்தப் பெற்ற தென்பது விளங்கும். ஆயினும், இப்போது நேரிட்டுள்ள காகிதப் பஞ்சத்தால் முதல் வருடத்தில் அச்சிட்டது போல் இரண்டாம் வருடத்தில் உயர்ந்த காகிதத்தில் அச்சிட இயலாமற் போயிற்று. அதுவுமன்றி அதிக பொருட் செலவும் நேர்ந்தது. ஆதலால் முதல் வருடத்திற் போலவே இரண்டாம் வருடத்திலும் சம்பளம் கொடுத்து லிகிதர் முதலிய உதவிகள் வைத்துப் பத்திரிகையை நடத்த இயலவில்லை. வியாசங்கள் எழுதுவது முதல் எல்லாக் காரியங்களையும் பத்திரிகாசிரியரே மிகவும் பிரயாசைப்பட்டுச் செய்து வந்தனர். ஆயினும் பத்திரிகை மாதந்தோறும் தவறுமல் வெளிவந்ததுமன்றி நியமந் தவறுமல் முதல்வாரத்திலேயே வெளிவந்து கொண்டிருந்தது. அரசாங்கத்தில் ஊழியஞ் செய்து களைத்து இளைப்பாற உபகாரச் சம்பளம்பெற்று வாழும் இவர் பொதுநலங்கருதித் தமதுசரீர சுகத்தைப் பாராட்டாது கஷ்டப்பட்டு உழைத்து வருவதைச் சைவாபிமானசீலர்கள் சீர்தூக்கி வேண்டிய உதவிகளைக் கொடுத்துப் பத்திரிகையை அபிவிருத்தி செய்வார்களென்று திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சென்ற வருடத்தில் பல விடங்களிலும் பல சைவாபிமான சீலர்கள் அன்பு கூர்ந்து பத்திரிகைக்குப் பல சந்தா தாரர்களைச் சேர்த்து உபகரித்தார்கள். யாழ்ப்பாணம் உதவிபாடசாலைப் பரிசோதகர் ஸ்ரீமான் யஸ். கந்தையா பிள்ளையவர்கள் முயற்சியால் இலங்கைத் தீவில் பலவிடங்களிலும் இப்பத்திரிகை பரவியது. இவர் முயற்சியால் நவம்பர் டிசம்பர் மாதங்களில் சுமார் 70 சந்தாதாரர்கள் சேர்ந்தார்கள். முதன்மலர் பல செலவாயின.

## ஆயுள் சந்தாதாரர்கள்.

இப்பத்திரிகைக்கு இதுவரையில் 118 ஆயுள் சந்தாதாரர்கள் சேர்ந்துள்ளார். இவர்களிட மிருந்து வந்த ஆயுள் சந்தா ரூபா 1100. இவர்கள் பெயர் முதலியன இதின் அநுபந்தத்திற் காட்டப் பட்டுள்ளன. இவர்களுள் 108 சந்தாதாரர்கள் ஸ்ரீமான் இரங்கோன் மெ. வெ. மெ. மெ. (தேவகோட்டை வ-ரா-ஞ-ரும) இராமநாதன் செட்டியா ரவர்களாலும்,

ஸ்ரீமான் ரங்கோன் செவு. சித். (நடராசபுரம் ஆ-த-ஆ) சொக்கலிங்கஞ் செட்டியாரவர்களாலும் சேர்க்கப்பட்டனர். இவர்கள் செய்த பேருபகாரத்தால் விரைவில் இப் பத்திரிகைக்கென்று பிரத்தியேகமாக ஓர் அச்சுக்கூடம் தாபிக்கப்படும்.

### அச்சுக் கூடம்.

இத்திருக் கூட்டத்தாரின் சபா மண்டபத்தின் கீழ்க்கட்டிடம் அச்சுக்கூடம்வைத்தற்கு வாய்ப்பான இடமாயிருப்பதனால் அதிலேயே அச்சுக்கூடத்தை வைத்தற்கு வேண்டியமுயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இது விரைவில் நிறைவேற வேண்டித் திருவருளைப் பிரார்த்திக்கின்றனம்.

### சபாமண்டபம்.

சபாமண்டபத்தில் ஏறிச் செல்வதற்கு இப்போதுள்ள வழி கோயிலினுள் இருத்தலினாலும், மிகவும் வசதிக் குறைவா யிருத்தலினாலும், வேறு வழி யொன்று வைக்கப் பலநாளாய் முயற்சி செய்யப்பட்டு வருகின்றது. இதற்கு இக்சபையின் போஷகருள் ஒருவராகிய (இஞ்ஜினீரிங் கன்ட்ராக்டர்) ராவ்சாஹிப் ஸ்ரீமான். பி. மாசிலாமணி முதலியாரவர்கள் மிகநல்ல மரப்படி சித்தப்படுத்தி யுள்ளார். சபையிலிருந்து 35ரூபா வரையில் செலவிட்டு வாசற்காலும் கதவும் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வேலையும் விரைவில் முற்றுப் பெறு மென்று எண்ணுகின்றோம்.

### சிவஞானமுனிவர் புத்தகசாலை.

இப்புத்தகசாலையில் இப்போது சுமார் 600—புத்தகங்கள் வரையில் இருக்கின்றன. இப்புத்தகசாலைக்குச் சென்றவருடத்தில் ஸ்ரீமத் யாழ்ப்பாணம் வண்ணைநகர்ச் சுவாமிநாத பண்டிதரவர்கள் சிவாக்கிரயோகிகள் இயற்றியருளிய வடமொழிச் சிவஞானபோதத்து முதற்சூத்திர வியாக்கியானமும், ஸ்ரீமான் சி-ஏகாம்பர முதலியாரவர்கள் சிவஞானபோத வசனாலங்காரதீபமும், ஸ்ரீமான் மாகறல் கார்த்திகேய முதலியாரவர்கள் மொழிநூலும், திருச்செங்கோட்டு சாம்பவஸ்ரீ சதாசிவபண்டித சிவாசாரிய சுவாமிகள் மகா உக்கிரவீர பத்திராஸ்திரமும், திருவாரூர் சுவாமிநாத தேசிகரவர்கள் தசகாரியமும் கொடுத்துபகரித்தார்கள்.

### நன்கொடை.

நெட்டால் டர்பான்-ஸ்ரீமான்-பி-எம். நாயகரவர்கள்—இவர் வெகு தூரத்திலிருக்கும் ஆப்பிரிக்கா கண்டத்தில் வசிப்பவராயிருந்தும், தமது ஜனன தேசாபிமானத்தாலும், தமிழ்ப் பாஷாபிமானத்தாலும், சைவ சமயாபிமானத்தாலும் தூண்டப்பட்டவராய், "திருவண்ணாமலை நேஷனல் மார்க்கண்டைல் அண்டு இண்டஸ்ட்ரியல் கம்பெனி"யில் தாம்

15—ரூபா கொடுத்து வாங்கி வைத்திருந்த மூன்று பங்குகளை இச்சபைக்குத் தானஞ் செய்துவிட்டார். அதற்கிணங்க அக்கம்பெனியார் அவருக்குக் கொடுத்திருந்த பாலிசி இப்போது இச்சபையின் பேரால் மாற்றப்பட்டுவிட்டது. அவ்வாறு மாற்றினதினால் கம்பெனியார் தங்கட்குச் சேரவேண்டிய தொகையை இலாபத்திற் கழித்துக்கொண்டு எஞ்சிய இலாபம் ரூபா 2-3-0 இச்சபைக்கு அனுப்பினார்கள்.

### கடன்.

சபாமண்டபத்தைச் சார்ந்த ஸ்ரீகற்பக விநாயகாலயத்தின் பொருட்டு இச்சபையார் ஹைகோர்ட்டில் நடத்திய வியாச்சியத்தால் நேரிட்ட கடனுக்குச் சென்ற வருடத்தில் கொடுத்ததொகை ரூபா—365. இன்னும் பாக்கியாயிருக்கும் தொகை ரூபா—39.

### நிர்வாக சபை.

சென்ற வருடத்தில் நிர்வாகசபை 9-முறை கூடிற்று.

### வரவுசெலவுக் கணக்கு.

சென்ற 1916-ஞு வரவு செலவுக் கணக்கு இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

### உற்சவங்கள்.

வருடந்தோறும் செய்துவரும் நியமத்தின்படி, இத்திருக்கூட்டத்தாரும், முத்தியாலுப்பேட்டை உமாமகேசுவரர் தமிழ்வேத பாராயண சபையாருங்கூடி, சென்ற டிசம்பர்மீ 3உ திருமுறை மகோற்சவம் கொண்டாடப்பட்டது. தரிசனார்த்தமாகச் சென்ற சிவனடியார்களுக்கு க்யுணியன் அச்சுக்கூடத்தலைவர் ஸ்ரீமான் கா-முருகேசச் செட்டியாரவர்கள் மாகேசுரபூசை செய்வித்தார்கள்.

ஸ்ரீகற்பக விநாயகாலய சதுர்த்தி மகோற்சவத்திற்குப் பத்து ரூபா உதவி செய்யப்பட்டது.

இத்திருக்கூட்டத்தின் போஷகர்களும், அங்கத்தினரும், அபிமானிகளும் ஸ்ரீதியாகராஜப்பெருமானார் திருவருளால் சகலைசுவரிய சம்பன்னராய் நீடூழிவாழுமாறு அவ்விறைவனார் திருவடிகளைத் தியானிக்கின்றோம்.

இங்ஙனம்,
உத்திரவின்படி,
இ. ஆதிமூலமுதலியார்.
காரியதரிசி.

# சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்தின் 1916ஆ வரவு செலவுக் கணக்கு.

| வரவு. | தொகை. ரூ. | அ. | ப. | செலவு. | தொகை. ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1916ஆ ஜனவரிமீ 1உ இருப்பு | 74 | 6 | 9 | சைவப்பத்திரிகை காகிதம் ரூபா. 174 9 6<br>,, தபால் 201 11 3<br>,, அச்சுக்கூலி 129 8 0<br>,, சில்லரை செலவு 15 13 0 | 521 | 9 | 9 |
| மாதசந்தா | 299 | 0 | 0 | பாடசாலை உபாத்தியாயர்கள் சம்பளம் 313-6-4<br>,, குடிக்கூலி 120-0-0<br>,, இதர செலவு 45-7-8 | 478 | 14 | 0 |
| சைவப்பத்திரிகை 1916ஆ சந்தா ரூ. 590-0-0<br>,, 1915ஆ பத்திரிகை விற்பனை 107-0-0<br>,, விளம்பர வரவு 20-7-6 | 717 | 7 | 6 | கடனும் வட்டியும் | 370 | 1 | 5 |
| ,, ஆயுள்சந்தா | 1080 | 0 | 0 | தண்டற்காரர் | 48 | 0 | 0 |
| பாடசாலை—பிள்ளைகள் சம்பளம் 179 15 0<br>,, அரசாங்கத்தின் உதவி 172 0 0<br>,, இதர வரவு 6 8 3 | 358 | 7 | 3 | சபாமண்டபத்திற்கு வாசற்காலும் கதவும் | 35 | 12 | 6 |
| நன்கொடை | 11 | 0 | 0 | உபாத்தியாயரிடம் கொடுத்த முன்பணம் | 4 | 0 | 0 |
| தபாலாபீசு சேவிங்ஸ் பாங்கு வட்டி | 0 | 11 | 1 | ஸ்ரீகற்பகவிநாயகர் சதுர்த்தி மகோற்சவம் | 10 | 0 | 0 |
| சுப்பிரமணியம் பாடசாலையில் சைவசமயபோதனை செய்தமைக்கு | 51 | 7 | 9 | ஷை குடிக்கூலி | 7 | 0 | 0 |
| திருமுறைத்திரட்டு விற்பனை | 6 | 1 | 0 | ரசீது அச்சிடுதல் காகிதம் முதலியன | 12 | 2 | 3 |
| | | | | ஞானதீபக் குடையாராதனை சபையில்பூசை முதலியன | 13 | 2 | 9 |
| மொத்த வரவு.... | 2598 | 9 | 4 | மொத்த செலவு.... | 1500 | 10 | 8 |
| | | | | 1916ஆ டிசம்பர்மீ 31உ இருப்பு ரூ 1097-14-8 | | | |

சு. சபாபதிமுதலியார்
கணிதபரிசோதகர்.

இ. ஆதிமூலமுதலியார்
காரியதரிசி.

## சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்தில்

1916-ஞ போஷகர்களாகவும் சமாசிகர்களாகவும் இருந்த கனவான்கள்.

### போஷகர்கள்.

ஸ்ரீமான் ராவ்சாஹிப் பி. மாசிலாமணிமுதலியாரவர்கள்
இன்ஜினீரிங் கன்ட்ராக்டர்.

,, ராவ்பஹதூர் கே. வைத்தியலிங்கம்பிள்ளையவர்கள்
ப்ரெஸிடென்ஸி போஸ்ட்மாஸ்டர்.

,, எஸ். இரத்தினவேல்செட்டியாரவர்கள்
துவிபாஷிகர், மெஸ்ஸர்ஸ் பெஸ்ட் அண்டு கோ.

,, மயிலை. கதிர்வேல்முதலியாரவர்கள்
சிந்தாதிரிப்பேட்டை, வர்த்தகர்.

,, சி. வெங்குபிள்ளையவர்கள், ரிடைர்ட் டிப்டி கலெக்டர்.

,, வி. முத்தையாபிள்ளையவர்கள்
வர்த்தகர், பெரியண்ணமுதலிவீதி சென்னை.

,, ஆர். காசிவிசுவநாதமுதலியாரவர்கள்
பொடி புகையிலை வர்த்தகர் சென்னை.

,, திரு. சபாபதிமுதலியாரவர்கள்
ரிடைர்ட் சப் இன்ஜினீர் தங்கசாலைவீதி சென்னை.

---

### நிர்வாகசபையார்.

#### சபைத்தலைவர்.

ஸ்ரீமான் ச. இராஜாக்கண்ணுமுதலியாரவர்கள், பி. ஏ.

#### உதவிச்சபைத்தலைவர்.

,, தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள், பி. ஏ.

#### காரியதரிசி. (பொக்கிஷகாரர்.)

,, இ. ஆதிமூலமுதலியாரவர்கள்.

#### உதவிக்காரியதரிசி.

,, பி. வி. சமரபுரிமுதலியாரவர்கள்.

## அத்தியட்சர்கள்.

ஸ்ரீமான் எஸ். விநாயகமுதலியாரவர்கள், பி. ஏ.
,, திரு. சபாபதிமுதலியாரவர்கள்.
,, வா. தி. கோவிந்தராஜமுதலியாரவர்கள்.
,, ஆர். துரைசாமிமுதலியாரவர்கள்.
,, மணிமங்கலம். திருநாவுக்கரசுமுதலியாரவர்கள்.
,, பா. கண்ணப்பமுதலியாரவர்கள்.
,, எஸ். டி. சமரபுரிமுதலியாரவர்கள்.
,, இ. சுப்பிரமணியமுதலியாரவர்கள்.

## கணிதபரிசோதகர்.

ஸ்ரீமான் சு. சபாபதிமுதலியாரவர்கள்.

---

## சாமாசிகர் (அங்கத்தினர்.)

ஸ்ரீமதி, பெங்களூர் நாகரத்தினம் அம்மாள் அவர்கள், சங்கீதபண்டிதை.
,, ம. கி. மீனாக்ஷி அம்மாள் அவர்கள்.
ஸ்ரீமான், எஸ். சமரபுரிச்செட்டியாரவர்கள், மானேஜர் பெஸ்டு அண்டுகோ ஆயில்மில்.
,, மி. பார்த்தசாரதிநாயுடு அவர்கள் ஜெயராமமுதலியாரவர்கள் வாழைப்பழக்கிடங்கு.
,, கா. ரா. நமசிவாயமுதலியாரவர்கள், தமிழ்ப்பண்டிதர்.
,, தி. முருகேசமுதலியாரவர்கள், பென்ஷனர் மதராஸ் பாங்கு.
,, பி. லோகநாதமுதலியாரவர்கள், கண்ட்ராக்டர்.
,, பு. துளசிங்கமுதலியாரவர்கள் ப்ரொப்ரைட்டர் பாலநாசு ரைஸ்பௌண்டரி.
,, மயிலை முருகேசமுதலியாரவர்கள், கவர்ன்மெண்டு பென்ஷனர்
,, பெ. சபாபதிமுதலியாரவர்கள், மணிலாகிடங்கு.
,, கே. சிவசங்கரமுதலியாரவர்கள், டெலிகிராப் ஆபீஸ்.
,, எஸ். டி. சமரபுரிமுதலியாரவர்கள், ஷிப்பிங் அண்டு க்ளியரிங் ஏஜெண்டு.
,, ஆர். விசுவநாதம்செட்டியாரவர்கள், வர்த்தகர்.
,, கு. அ. ந. சுப்பராயசெட்டியாரவர்கள், ஒற்றைவாடை அரிசிமண்டி.
,, கோ. கணேசம், நீலகிரி, கோடப்பமந்து காப்பிவர்த்தகர்.
,, கோ. ஆறுமுகமேஸ்திரியவர்கள், டிை

ஸ்ரீமான் சோ. சக்கிரபாணி முதலியாரவர்கள், அப்பா அண்டு கோ.
,, க. தே. சபாபதிசெட்டியாரவர்கள், ஒற்றைவாடை அரிசிமண்டி.
,, பொ. அரங்கநாதமுதலியாரவர்கள், ஹோ அண்டு கோ.
,, தி. சுப்பராயநாயகரவர்கள், வர்த்தகர் திருவல்லிக்கேணி.
,, அ. சிங்காரவேலுசெட்டியாரவர்கள், திருவல்லிக்கேணி
,, ஆறுமுகநாயகரவர்கள், திருவல்லிக்கேணி அரிசிமண்டி.
,, அ. ப. கோவிந்தசாமிசெட்டியாரவர்கள்,
திருவல்லிக்கேணி ஷராப்.
,, ரா. குமாரசாமிச்செட்டியாரவர்கள்,
திருவல்லிக்கேணி மளிகைவர்த்தகர்.
,, ம. மு. கோவிந்தராஜசெட்டியாரவர்கள்,
திருவல்லிக்கேணி அரிசிமண்டி.
,, வி. கிருஷ்ணசாமிப்பிள்ளையவர்கள்,
ஹாஷியர் கிங் அண்டு பார்ட்ரிட்ஜ்.
,, வி. எஸ். தெய்வசிகாமணிமுதலியாரவர்கள், கிளார்க்
எம். அண்டு எஸ். எம். ரெயில்வே இராயபுரம்.
,, பார்த்தசாரதிமுதலியாரவர்கள், வெற்றிலை வர்த்தகர்.
,, ஆர். பி. துரைசாமிமுதலியாரவர்கள்,
கவர்ன்மெண்டு பென்ஷனர்.
,, சி. பா. சண்முகமுதலியாரவர்கள், ஜவளி பொடிவியாபாரம்.
,, பி. எம். முருகேசமுதலியாரவர்கள், சாக்ஸ்டன் அச்சுக்கூடம்.
,, கூ. சிவவாசுதேவமுதலியாரவர்கள் அக்கவுண்டண்டு,
யெம் அண்டு யெஸ் யெம் ரெயில்வே.
,, சி. கன்னையநாயுடுஅவர்கள், சாக்ஸ்டன் அச்சுக்கூட அதிபர்.
,, எம். நடேசமுதலியாரவர்கள், கார்பரேஷன் ஓவர்சீயர்.
,, ஜி. முருகேசமுதலியாரவர்கள், கிளார்க், மெக்டாவல் கம்பெனி.
,, எம். இராமலிங்கமுதலியாரவர்கள், வர்த்தகர் கொண்டித்தோப்பு.
,, டி. வி. குப்புசாமிமுதலியாரவர்கள், ஷராப், தாலுக்கா ஆபீசு.
,, இ. சுப்பிரமணியமுதலியாரவர்கள், உபாத்தியாயர்.
,, வி. எஸ். பவானந்தம்பிள்ளையவர்கள், 5 ரெயில்ரோட்
பெங்களூர்.
,, கே. லோகநாதமுதலியாரவர்கள், அச்சுக்கூடத்தலைவர்,
வைத்தியநாதமுதலி வீதி.
,, வி. கிருஷ்ணசாமிமுதலியாரவர்கள், கார்பொரேஷன், கணிதர்.

## சைவப்பத்திரிகைக்கு நிகழும் 1917ஆம் பிப்ரவரிமீ வரையிற் சேர்ந்த ஆயுள் சந்தாதாரர்கள்.

---

1. ஸ்ரீமான் நி-ட-உ-உலகப்பனம்பலம் அவர்கள், கொத்தமங்கலம்.
2. ,, வெ-கண-வெ-ஆதீனமிளகிசெட்டியார் அவர்கள், 85 மொகல் வீதி ரங்கோன். (நா-சுப-நாட்டரசங்கோட்டை)
3. ,, கு-ஆலங்காட்டுமுதலியார் அவர்கள், தக்கோலம்.
4. ,, சி-வ-நா-ராம-உலகப்பசெட்டியார் அவர்கள், 85 மொகல்தெரு ரங்கோன். (உல-கண-உல-சக்கந்தி)
5. ,, சி-கரு-சி-கரு-அழகப்பச்செட்டியார் அவர்கள், 85 மொகல் தெரு, ரங்கோன். (கரு-உ-அள-கல்லல்)
6. ,, மு-தெ-அ - அளகப்பச்செட்டியார் அவர்கள், 10 மொகல் தெரு. ரங்கோன். (உ-ரும-ஆ-கோட்டையூர்)
7. ,, ஆ-வீர-வீ-ஆறுமுகஞ்செட்டியார் அவர்கள், 6 மொகல்தெரு, ரங்கோன். (ஆ-வீர-வீ-ஆரு-நாட்டரசங்கோட்டை)
8. ,, கண-மெ-மெ-நா-அருணாசலம்செட்டியார் அவர்கள், 6 மொகல் தெரு ரங்கோன். (உல-கண-அரு-சக்கந்தி)
9. ,, ஆ-சு-ப-சு-அடைக்கலப்பச்செட்டியார் அவர்கள், 4 மொகல் தெரு, ரங்கோன். (ஆ-சு-ப-சு-நாட்டரசங்கோட்டை)
10. ,, செ-அ-ராம-அருணாசலம்செட்டியார் அவர்கள், 4 மொகல் தெரு, ரங்கோன். (செ-அ-ராம-கா-காரைக்குடி)
11. ,, சா-அ-ராம-மு-சித-மு-அ-அழகப்பசெட்டியார், அவர்கள் தாட்டன் பர்மா. (வீர-அள-தேவகோட்டை)
12. ,, பழ-தெ-அ-அருணாசலஞ்செட்டியார் அவர்கள், பெகு, பர்மா (பழ-தெ-அ-காரைக்குடி)
13. ,, யெ-நா-மு-க-அழகப்பச்செட்டியார் அவர்கள், பெகு. பர்மா. (ஆரு-அ-கீளச்சிவல்பட்டி)
14. ,, சித-பெரி-சித-அழகப்பச்செட்டியார் அவர்கள், கெய்க்லாட் பர்மா. (தெ-மு-நா-கீழச்சிவல்பட்டி)
15. ,, அரு-ராம-மெ-அருணாசலம்செட்டியார் அவர்கள், பர்மா. (கும்பியோ) எ-எ-அ-தேவகோட்டை)
16. ,, சொ-மா-அண்ணாமலைசெட்டியார் அவர்கள், 13 மொகல்தெரு, ரங்கோன். (சொ-மா-பள்ளத்தூர்)
17. ,, அண்ணாமலைசெட்டியார் அவர்கள், மானேஜர் மலையரசியம்மன் ரீடிங்ரூம், சிறுகுடப்பட்டி இராமநாதபுரம்.

18. ஸ்ரீமான் கண-க-லெ-கண்ணப்பச்செட்டியார் அவர்கள், 85 மொகல் தெரு ரங்கோன் (கண-க-லெ-நாட்டரசன்கோட்டை)

19. ,, சுட-கண-வயி-கண்ணப்பச்செட்டியார் அவர்கள், 85 மொகல் தெரு ரங்கோன் (குப-கண-கயி-நாட்டரசங்கோட்டை)

20. ,, கு-ப-அ-நா-ச-கண-கண்ணப்பச்செட்டியார் அவர்கள், 85 மொகல்தெரு ரங்கோன் (கு-ப-அ-ந-கண-நாட்டரசங் கோட்டை)

21. ,, மெ-அரு-நா-கருப்பஞ்செட்டியார் அவர்கள், கு-அரு-அள-கரு, தேவகோட்டை

22. ,, கும-அரு-குமரப்பச்செட்டியார் அவர்கள், 6 மொகல்தெரு, ரங்கோன் (கும-அரு-செப்பனூர்)

23. ,, உ-ராம-மெ-சு-ப-சேவு-காசிவிசுவநாதஞ்செட்டியார் அவர்கள், 12 மொகல்தெரு, ரங்கோன் (செ-உ-உ-அரமனைசிறுவயல்)

24. ,, சி-ராம-சி-குட்டயஞ்செட்டியார் அவர்கள், 13 மொகல் தெரு ரங்கோன். (சி-ராம-கி-கொத்தமங்கலம்)

25. ,, வீர-பெரி-கதி-கதிரேசச்செட்டியார் அவர்கள், கீழச்சிவல்பட்டி

26. ,, ராம-சு-லெ-ராம-காடப்பசெட்டியார் அவர்கள், பெகு பர்மா, (ராம-கா-வேகுப்பட்டி)

27. ,, சுப-க-அ-குமரப்பச்செட்டியார் அவர்கள், ஓன் பர்மா. (சுப-கும-சக்கந்தி)

28. ,, அரு-ராம-குப்புச்சாமிபிள்ளை அவர்கள், கேய்க்லாட் பர்மா, (சொ-பொ-கு-தேவகோட்டை)

29. ,, செவு-சித-சொக்கலிங்கம்செட்டியார் அவர்கள், 85 மொகல் தெரு ரங்கோன் (ஆ-த-ஆலூடராசபுரம்)

30. ,, க-மெ-உ-நா-ராம.க-சிவராமன்செட்டியார் அவர்கள், 85 மொகல் தெரு ரங்கோன். (சுப-சிவ-அளகாபுரி)

31. ,, ராம-அரு-அரு-ராம-சொக்கலிங்கம்செட்டியார் அவர்கள், 85 மொகல்தெரு ரங்கோன் (மது-வி-பூலாங்குறிச்சி)

32. ,, மெ-அரு-அரு-சொக்கலிங்கம்செட்டியார் அவர்கள், 85 மொகல்தெரு ரங்கோன் (சி-ராம-அ-சொ-நாரைக்குடி)

33. ,, நா-பெ-அ-க-சிதம்பரம்செட்டியார் அவர்கள், 10 மொகல் தெரு ரங்கோன் (சி-த-சொ-சி-த-கோட்டையூர்)

34. ,, ரா-பெ-சி-த-சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், 10 மொகல் தெரு ரங்கோன் (க-ஆ-கொத்தமங்கலம்.)

35. ,, பெ-செ-ச-சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள், 10 மொகல் தெரு ரங்கோன் (அரு-சோ-வெற்றியூர்)

36. ,, அள-அரு-சுப்பிரமணியஞ்செட்டியாரவர்கள், 6 மொகல் தெரு ரங்கோன் (சுப-அ-சுப-நாட்டரசங்கோட்டை)

37. ,, முரு-ராம-முரு-சிவசுப்பிரமணியம்செட்டியாரவர்கள், 6 மொகல்தெரு ரங்கோன் (நா-கரு-நாட்டரசங்கோட்டை)

38. ,, பள-உ-செட்டியப்பசெட்டியாரவர்கள், 6 மொகல்தெரு ரங்கோன் (ஆரு-செ-பாகநேரி)

39. ,, ஆ-மு-சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், 6 மொகல்தெரு ரங்கோன் (கும-நா-க-ராம-கல்லல்)

40. ,, முத்து-கரு-வெ-சுப்பிரமணியஞ்செட்டியாரவர்கள், தேவகோட்டை (கு-அரு-அள-அரு)

41. ,, ராம-வெ-சொ-சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், 6 மொகல் தெரு ரங்கோன் (லெ-ராம-கல்லுப்பட்டி)

42. ,, சுப-ராம-சுப்பிரமணியஞ்செட்டியாரவர்கள், 4 மொகல்தெரு ரங்கோன் (சுப-மெ-சுப-நாட்டரசங்கோட்டை)

43. ,, கண-கரு-அ-தெ-சோமசுந்தரம்செட்டியாரவர்கள், 4 மொகல் தெரு ரங்கோன் (உ-அரு-கரு-சோம-பாகநேரி)

44. ,, வெ. வெ. கரு. சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள் 4 மொகல் தெரு ரங்கோன் (வெ-வெ-கரு-பாகநேரி)

45. ,, ப-மு-லெ-சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள், 4 மொகல்தெரு ரங்கோன் (இ-கரு-கரு-பாகநேரி.)

46. ,, கண-லெ-சிதம்பரஞ்செட்டியாரவர்கள், 4 மொகல்தெரு ரங்கோன் (மு-பெ-சொக்கலிங்கபுரம்.)

47. ,, வெ-தெ-அ-லெ-சாமிநாதஞ்செட்டியாரவர்கள், 12 மொகல் தெரு ரங்கோன் (மெ-சுப-சொ-தேவகோட்டை)

48. ,, உ-அ-உ-க-சுப்பிரமணியம்செட்டியாரவர்கள், 12 மொகல் தெரு ரங்கோன் (சு-அ-அ-அளகாபுரி)

49. ,, பி-கு-நா-சித-சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், 12-மொகல் தெரு ரங்கோன் (லெ-கு-சோம-தேவகோட்டை)

50. ,, சோ-மு-அ-சிதம்பரஞ்செட்டியாரவர்கள், 12-மொகல் தெரு ரங்கோன் (சி-மு-நா-ராம-பள்ளத்தூர்)

51. ,, ராம-பெ-சொக்கலிங்கம்செட்டியாரவர்கள், 13-மொகல் தெரு ரங்கோன் (சு-கி-கரு-கல்லல்)

52. ,, சித-அ-செ-சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், மின்லா,பர்மா (வயி-கரு-சிதசோம-தேவகோட்டை)

53 ,, சி-கரு-சி-கரு-சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், ஓன் பர்மா (செ-மு-செ-கண-உக்கூர்)

54. ,, ரா-ம-மு-சிவராமன்செட்டியாரவர்கள், ஓன் பர்மா (ராம-ஆ-தெக்கூர்)

55. ,, அரு-அரு-சோம-சுப்பிரமண்ணியம்செட்டியாரவர்கள், மாபின் பர்மா (கண-மு-மு-சுப-வெற்றியூர்)

56. ,, ப-சி-பழ-சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள், மாபின் பர்மா (மு-மு-ராம-காண்டவராயன்பட்டி)

57. ,, மெ-லெ-மெ-ராம-சாமிநாதன்செட்டியாரவர்கள், ஓன் பர்மா (அரு-முரு-சொ-தேவகோட்டை)

58. ,, அ-முரு-அ-சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள், லெகு பர்மா (அ-முரு-அ-காரைக்குடி)

59. ,, சிர-சித-ராம-அ-சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள், லெகு பர்மா (ஆ-வீர-மு-காரைக்குடி)

60. ,, அரு-கண-சிதம்பரஞ்செட்டியாரவர்கள், 6-மொகல்தெரு ரங்கோன் (அரு-கண-கீழப்பூங்குடி)

61. ,, தெ-பழ-சித-சதாசிவம்செட்டியாரவர்கள், கொத்தமங்கலம் (கானாடு காத்தான்)

62. ,, வி-சிவசுப்பிரமணியப்பண்டிதரவர்கள், ஔஷதசாலை நாயன் மார்க்கட்டு யாழ்ப்பாணம்

63. ,, குப-மு-ராம-நாராயணன்செட்டியார்வர்கள், மோல்மீன் (கி-ப-நா-கி-கீழச்சிவல்பட்டி)

64. கரு-வெ-நா-நாராயணன்செட்டியாரவர்கள், பென்ஷிகான் பர்மா (கரு-வே-நா-ஓசிறுவயல்)

65. ,, பழ-முரு-பழ-பழனியப்பச்செட்டியாரவர்கள், 88-மொகல் தெரு ரங்கோன் (பழ-முரு-பழ-புதுப்பட்டி)

66. ,, சி-கரு-சி-லெ-பீஞ்சாட்க்ஷாஞ்செட்டியாரவர்கள், ஒன் பர்மா (வீரபசுப-நாட்டரசன் கோட்டை)

67. ,, ப-ராம-அ-பழனியப்பச்செட்டியாரவர்கள், ஒக்ரான் பர்மா (ப-ராம-அ-புதுப்பட்டி)

68. ,, ராம-அ-பெரியகருப்பன்செட்டியாரவர்கள், ஒயிம் பர்மா (மெ-நா-க-லெ-காரைக்குடி)

69. ,, பழ-பிச-பிச்சகுட்டிசெட்டியாரவர்கள்,(சிக-மு-ரா-சிதம்பரஞ் செட்டியாரவர்கள்) தேவகோட்டை

70. ,, சி-கரு-சி-லெ-முத்தய்யாசெட்டியாரவர்கள், 85-மொகல் தெரு ரங்கோன் (நா-மு-சொக்கநாதபுரம்)

71. ,, பழ-ராம-மெய்யப்பச்செட்டியாரவர்கள், 88-மொகல் தெரு ரங்கோன் (பழ-அ-கொப்பனாப்பட்டி)

72. ,, சா-மு-ராம-முத்தய்யாசெட்டியாரவர்கள், 88-மொகல் தெரு ரங்கோன் (சித-சுப-வேந்தம்பட்டி)

73. ராம-ப-வ-மு-முத்துராமன்செட்டியாரவர்கள், 4-மொகல் தெரு ரங்கோன் (கரு-செமு-செவ்வூர்)

74. ,, வெ-பெரி-பழ-முத்தய்யாசெட்டியாரவர்கள், 4-மொகல் தெரு ரங்கோன் (வெ-பெரி-பழ-பாகநேரி)

75. ,, சொ-மு-அ-ஏஜண்டாயிருக்கும் மெய்யப்பச்செட்டியாரவர்கள், (கரு-செ) ராயவரம்

76. ,, பழ-ராம-முருகப்பச்செட்டியாரவர்கள், ஆக்ட்வின் பர்மா (பழ-முரு-அ-காரைக்குடி)

77. ,, பழ-ராம-மெய்யப்பச் செட்டியாரவர்கள், ஆக்ட்வின் பர்மா (அ-முரு-மெ-காரைக்குடி)

78. ,, கரு-வெ-அழ-முத்தய்யாசெட்டியாரவர்கள், பென்விகான் பர்மா (அ-க-மு-கீளச்சிவல்பட்டி)

79. ,, மு-குழ-முத்தய்யாசெட்டியாரவர்கள், லெகெய் பர்மா (மு-குழ-கண்டமாணிக்கம்)

80. ,, சி-கரு-சி-சித-முத்தய்யாபிள்ளையவர்கள், பேகு பர்மா (ஆ-மு-உறங்கரம்பட்டி)

81. ,, க-மெ-உ-நா-ராம-க-முத்துப்பிள்ளையவர்கள், எபியா பர்மா (ந-வீ-மு-ஏனுபுரம்)

82. ,, கும-நா-நா-சா-முத்துராமன்செட்டியாரவர்கள், கடப்பாஞு பர்மா (வடு-மு-கல்லல்)

83. ,, யஸ்-முருகப்பிள்ளையவர்கள், லைட்கோர்ட், தெற்குப் புது தெரு தூத்துக்குடி

84. ,, உல-க-கண-ராமநாதன்செட்டியாரவர்கள், 85-மொகல்தெரு ரங்கோன் (உல-க-கண-சக்கந்தி)

85. ,, சி-கரு-சி-சித-ராமநாதன்செட்டியாரவர்கள், 85-மொகல் தெரு ரங்கோன் (உ-உ-மு-அளகாபுரி)

86. ,, பி-அரு-பி-ராமநாதன்செட்டியாரவர்கள், 85-மொகல் தெரு ரங்கோன் (ந-ராம-கண-ராம-அலவாக்கோட்டை)

87. ,, உல-க-கண-ராமன்செட்டியாரவர்கள், 85-மொகல் தெரு ரங்கோன் (கரு-சு-ப-சொக்கலிங்கபுரம்)

88. ,, பி-கு-பி-சு-ராமன்செட்டியாரவர்கள், 85-மொகல் தெரு ரங்கோன் (ராம-ப-ராம-வலையப்பட்டி)

89. ,, மெ-செ-மெ-மெ-ராமநாதன்செட்டியாரவர்கள், 10-மொகல் தெரு ரங்கோன் (வ-நா-க-ராம-தேவகோட்டை)

90. ,, லெ-ராம-அ-ராமன் செட்டியாரவர்கள் 88-மொகல் தெரு ரங்கோன் (சித-ராம-கோட்டையூர்)

91. ,, அ-ராம-சு-ராமநாதன்செட்டியாரவர்கள், 81-மொகல் தெரு ரங்கோன் (வீர-கரு-தேவகோட்டை)

92. ,, வீர-ராம-அ-ராம-ராமநாதன்செட்டியாரவர்கள், 6-மொகல் தெரு ரங்கோன் (வீர-ராம-ராம-உக்கூர்)

93. ,, சிக-அரு-சித-ராமநாதன்செட்டியாரவர்கள், 6-மொகல் தெரு ரங்கோன் (வீர-ராம-நா-உக்கூர்)

94. ,, சி-அரு-ராமநாதன்செட்டியாரவர்கள், 6-மொகல் தெரு ரங்கோன் (கண-வி-ராம-காளையார் மங்கலம்)

95. ,, பி-நா-பி-ராம-ராமசாமிசெட்டியாரவர்கள், 6-மொகல் தெரு ரங்கோன் (பி-நா-பி-ராம-அலவாக்கோட்டை)

96. ,, சா-த-சிவ-ராமநாதன் செட்டியாரவர்கள் 4-மொகல் தெரு ரங்கோன் (அண-வீர-ராம-நடராசபுரம்)

97. ,, கு-முத்-து-ராமசாமிச்செட்டியாரவர்கள்; பெகு பர்மா (பழ-உ-ப-தேவகோட்டை)

98. ,, சா-ராம-அருணாசலஞ்செட்டியாரவர்கள், கெய்க்லாட் பர்மா (வெ-ராம-வேகுப்பட்டி)

99. ,, ஆரு-ஆ-ராமஞ்செட்டியாரவர்கள், கெய்க்லாட் பர்மா (அ-ராம-சு-ஒசிறுவயல்)

100. ,, ப-கு-பழ-ராமநாதன்செட்டியாரவர்கள், மோல்மீங்கியன் பர்மா (ப-ராம-லெ-செ-வெ-காரைக்குடி)

101. ,, வே-இரத்தினவேல்முதலியாரவர்கள், கவர்ன்மெண்டு பென்ஷனர் திருவடிசூலம் செங்கல்பட்டு

102. ,, அரு-அரு-சோம-இலட்சுமணச்செட்டியாரவர்கள், 85 மொகல்தெரு ரங்கோன் (மா-லெ-லெ-வெற்றியூர்)

103. ,, சுப-கண-கா-லெ-இலட்சுமணச்செட்டியாரவர்கள், 6-மொகல் தெரு ரங்கோன் (சுள-கா-லெ-நடராஜபுரம்)

104. ,, உல-க-க-இலக்ஷ்மணன்செட்டியாரவர்கள், 6-மொகல் தெரு ரங்கோன் (ந-ராம-கண-சுப-அலவாக்கோட்டை)

105. ,, உ-சு-உ-க-இலக்ஷ்மணன்செட்டியாரவர்கள், 12-மொகல் தெரு ரங்கோன் (சிவ-நா-தேவகோட்டை)

106. ,, அ-ராம-அ-மு-வீர-இலட்சுமணன்செட்டியாரவர்கள், (அ-ராம-அ-மு-வீர தேவகோட்டை)

107. ,, சொ-மு-ராம-இலட்சுமணன்செட்டியாரவர்கள், பெகு பர்மா (பெ-ராம-லெ-ராம-காரைக்குடி)

108. ,, வீ-லெ-க-லெ-இலட்சுமணன்செட்டியாரவர்கள், ஓன் பர்மா (ராம-கண-லெ-நாட்டரசன்கோட்டை)

109. ,, சி-கரு-ஆ-கண இலட்சுமணன்செட்டியாரவர்கள், ஓன் பர்மா (கண-வி-லெ-கானாடுகாத்தான்) 

110. ,, உ-அ-உ-க-இலக்ஷ்மணன்செட்டியாரவர்கள், மின்லா பர்மா, (முரு-லெ-காரைக்குடி.)

111. ,, சி-ராம-அ-இலக்ஷ்மணன்செட்டியாரவர்கள், (கொத்தமங்கலம்)

112. ,, வி-ஆர்-எம்-எம்-இலக்குமணச்செட்டியாரவர்கள், (கொத்தமங்கலம்)

113. கூ—கண—க—வெள்ளையப்பச்செட்டியாரவர்கள், 85 மொகல் தெரு ரங்கோன் (முரு-லெ-வெ-அரமனை சிறுவயல்)

114. ,, கண-க-லெ-வீரப்பச்செட்டியாரவர்கள், 85 மொகல்தெரு ரங்கோன் (சு-ப-கு-ப-வீர-நாட்டரசங்கோட்டை)

115. ,, வ-ராம-லெ-வீரப்பச்செட்டியாரவர்கள், புதுவயல் (ராமநாதபுர ஜில்லா)

116. ,, கூ-கண-க-அரு-வீரப்பச்செட்டியாரவர்கள், லாகுவா பர்மா (வீர-பழ-காளையார்மங்கலம்)

117. ,, செ-கு-லெ-மு-வைரவன்செட்டியாரவர்கள், கடப்பாளு பர்மா (மு-வீர-வயி-நச்சாந்துப்பட்டி)

118 ,, மு-சா-வள்ளியப்பசெட்டியாரவர்கள், டாங்கூ பர்மா (வ-அ-வ-பாகனேரி)

---

## குமரகுருபரசுவாமிகள் சரித்திரம்.

(48—வது பக்கத்தொடர்ச்சி)

சிவிகையினின்றுமிறங்கிக் கங்கையைவணங்கி, அதிலே ஸ்நானஞ்செய்து தமது நியதிகளை முடித்துக்கொண்டு, அக்கங்கையின் இருபுறத்திலுங் காடுகளடர்ந்து, துருக்கர்களுடைய பள்ளியும் சமாதியுமே நிறைந்திருப்பதைக்கண்டு, மனநொந்து, அன்றிரவு நித்திரைசெய்தார். அப்போது அந்தக்காடுகளால் மறைக்கப்பட்டிருந்த கேதாரத்திலெழுந்தருளிய சிவபெருமான் அவருக்குச் சொப்பனத்திலேதோன்றி, "நம்மைப் பூசிப்பாயாக" என்று ஆஞ்ஞாபிக்க, சுவாமிகள் அவ்வாறே மற்றைநாட் பிராமமுகூர்த்தத்திலே கேதாரத்தை யடைந்து. காடுகளையெல்லாம் அழிப்பித்து, அதனடுவே எழுந்தருளிய சிவபெருமானைப் பூசித்துத்துதித்து பின்னர் விசுவநாதரை விசாலாக்ஷியம்மையாரோடும் அருச்சித்து வணங்கி, "காசிக்கலம்பகம்" என்னும் ஓர் பிரபந்தத்தை அருளிச்செய்தார்.

அத்தலத்தில் வசிக்குநாளிலே, அந்நகரத்தையாண்டுகொண்டு அங்கிருந்த டில்லிபாக்ஷாவைக் கண்டு வசனித்துத் தருமமியற்றுதற்கு வேண்டும் இடம்பெறவிரும்பி, அவனுக்குரிய இந்துஸ்தானிபாஷையைத் தெரிவித்தருளும்படி சகலபாஷைகளிலும் வல்ல சரஸ்வதியைப் பிரார்த்தித்து "சகலகலாவல்லி மாலை" என்னும் பிரபந்தத்திலே ஒன்பது பாடலருளியும், திருவருள் செய்யாதிருந்தமைகண்டு, "மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்—பண்கண்டளவிற் பணியச் செய்வாய்" என்னும் பத்தாவதுபாட்டை அருளிச்செய்தார். உடனே சரஸ்வ

தியார் திருவருள்சுரந்து அப்பாஷையை விளக்கியருள; சுவாமிகள் களி கூர்ந்து, அவ்வரசன்சமுகத்திற் கெழுந்தருளினார். அவன் சுவாமிகளுடைய அருமைபெருமைகளைச் சிறிதும் அறியாதவனாகையால்சிங்காதனத்திலிருந்துகொண்டே வாலாற்றைவினவ; சுவாமிகள் அதனாலே தமக்கு யாதொருகுறைவும் இல்லையாயினும், அவனுக்கு நேரிடும் கெடுதியை யோசித்து, கருணைகூர்ந்து, "மஹாராஜாவே, உமக்கு ஆசீர்வதிக்க வந்த நம்மை இப்படி நிறுத்திக்கொண்டு வினவுவது தருமமல்ல," என்று உரைத்தருளினார், அதுகேட்ட அரசன் "உம்மிடத்திலே தெய்வீகங் கண்டாலன்றி உமது சரீரத்தோற்றத்திற்கு நான்மரியாதை செய்யேன்" என்று சொல்ல; சுவாமிகள் "அப்படியாயின் அதனை நாளைக்குக்காட்டுவோம்" என்றுசொல்லி மீண்டு, மற்றைநாள் காளியினுடைய அநுக்கிரகத்தால் வந்த ஒருசிங்கத்தின் மேலேறிக்கொண்டு, யாவரும் அஞ்சும்படி சபையையடைந்து, அரசனைநோக்கி, "நீர் இருப்பது உயிரற்றசிங்கம் நாம் இருப்பது உயிருற்ற சிங்கம்; ஆயினும் நீர் அஞ்சவேண்டுவதில்லை. உமக்கு மாத்திரம் இது பசுவாகத்தோன்றும்." என்றுசொல்லி, அதிலிருந்த படியே அவன்வினாக்களுக்கு உத்தரங்கொடுத்து அவன் வணங்கும்படி செய்து அங்கே வீற்றிருந்தருளினார்.

அக்காலத்திலே அரசனையும் பிறரையும் சந்தோஷிப்பிக்கும்படி நடாத்திய பிரசங்கங்களுள்ளே சிற்றின்பத்தைக் குறித்துச்செய்யும் பிரசங்கத்தைக் கேட்டு, துறவிகளாய் விருத்தப்பருவ மடைந்துள்ள அரசனுடைய குருமுதலியோர்களும் விரகத்தினாலே மயங்கிப் பூமியிலே விழுவார்கள். யுத்தவிஷயமாகச் செய்யும் பிரசங்கத்தைக் கேட்டு வயோதிகர்களும் கண்சிவந்து பற்களைக்கடித்து, ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு ஆரவாரிப்பார்கள். இவ்வாறு ஒவ்வொரு விஷயங்களையும் பற்றிப் பிரசங்கிக்கும் பிரசங்கங்களினும் தாங்கள் அந்தந்த மயமாதலையடைந்தும், சில துருக்கர்கள் மற்றவைகளைப்பற்றிச் சந்தேகியாமல் சிற்றின்பத்தைக்குறித்துச் செய்த பிரசங்கத்தில்மாத்திரம் சந்தேகம்பிறந்து, இவருக்கு அநுபவமில்லாமலே சாஸ்திரத்தால் இவ்விஷயத்தில் இவ்வளவு பேசமுடியுமா வென்று சுவாமிகளைநோக்கி, "இவர் பகற்சந்நியாசிபோலும்" என்பதுமுதலாகப் பலவாறு பிதற்றுவாராயினார்கள். அதுகண்டு சுவாமிகள் மிகவும் களிம்பேறிய ஒரு செப்புப் பாத்திரத்தை அழைப்பித்து, அவ்வாறுபிதற்றிய துருக்கர்களை நோக்கி, "நாளைக்கு இதை மருந்தில்லாமலே பொன்னுக்குதலாகிய ஒரு இரசவாதம் செய்வோம்." என்றுசொல்லி, அப்பாத்திரத்தை அவர்கள் காணும்படி மலத்திலே புதைப்பித்தார்.

(இன்னும் வரும்.)